FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319461

1. District : மதுரை PS: உசிலம்பட்டி Year: 2025 FIR No.: 17/25 Date: 18.10.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PCAct 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018, BNSS Act Sections பிரிவுகள்: 7 of PCAct 1988 as amended by Prevention of Corruption (amendment) Act 2018 106 BNSS Act

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17.10.25 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 14.45 Time to : 23.00 மணி அளவு
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 18.10.25 Time : 11.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 18.10.25 Time : 12.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தட்டச்சு செய்யப்பட்டது
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 2 கி.மீ. தூரம் தெற்கு நோக்கி உசிலம்பட்டி அரசு மருத்துவமனை, திருமங்கலம் - மதுரை சாலை
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திருமதி. A. இந்திராணி (b) Father's/ Husband's Name : C. மகாதேவன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1981 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : அரசு அதிகாரி (g) Address : மாவட்ட குடும்பநல அலுவலகம் மதுரை
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. கா. மலர்வண்ணன், வயது 52/25, தி/வ.எண்.1357 உட்பார் வளர்ச்சி அலுவலர் (பட்டியல் வகுப்பு), வகுப்பு அதிகாரி அலுவலகம், திருமங்கலம். 2. திருமதி. ப. சந்தனதேவி, 54/25 கிராம பஞ்சாயத்து உட்பார் வளர்ச்சி அலுவலர் (ஓய்வு) திருமங்கலம் மற்றும் 7 எதிரிகள் பெயர் விபரம் பக்கத்தில் தொடர்ச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S.I. P.N. Rajasekaran to take up the Investigation / Refused Investigation / transferred to PS. ..... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி, ... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.10.25

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18.10.25

15 Date & Time of despatch to the court: 18.10.25 14.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை Inspector of Police
VGAPS Madurai

எதிரிகளின் தொடர்ச்சி...

எதிரி-3) திருமதி.A.தாமரைச்செல்வி, வயது 45/2025
த/பெ. அழகப்பன்,
ஊராட்சி செயலாளர், தி.புதுப்பட்டி ஊராட்சி,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

எதிரி-4) திருமதி.V.G. ராஜேஸ்வரி, வயது 57/2025,
க/பெ. குருசாமி,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

எதிரி-5) திருமதி.S. வாசுகி, வயது 56/2025,
க/பெ. சொக்கலிங்கம்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

எதிரி-6) திருமதி.A. நபிஷா பர்வின், வயது 41/2025,
க/பெ. காதர்ஷா ஒளி,
தற்காலிக கணினி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

எதிரி-7) திருமதி.S.கார்த்திகா, வயது 29/2025,
க/பெ. S. சசிகுமார்,
இளநிலை உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

எதிரி-8) திருமதி. R.கவிதா, வயது 30/2025,
க/பெ. விக்னேஷ்,
இளநிலை உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

எதிரி-9) திருமதி. A.பூர்ணாதேவி, வயது 41/2025.
த/பெ. ஆனந்தம்,
அலுவலக உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 18.10.2025-ம் தேதி காலை, காவல் ஆய்வாளர் T. சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.A. சித்ரகலா அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காலை 11.00 மணிக்கு ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை, கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,11,000/- மற்றும் பணம் வைத்திருந்த காக்கி நிற கவர்கள்-2, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு.மலர்வண்ணன் அவர்களின் IIM TRICHY என்று எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப், திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பதிவேடுகள் - 4 மற்றும் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), திரு. K.மலர்வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருமதி.P.சந்திரகலா, திருமதி.A.தாமரைச்செல்வி, திருமதி.V.G.ராஜேஸ்வரி, திருமதி.S.வாசுகி, திருமதி.A. நபிஷா பர்வின், திருமதி.S.கார்த்திகா, திருமதி. R.கவிதா, திருமதி. A.பூர்ணாதேவி, திரு.S.முருகன், திரு.R.ஜீவானந்தம் மற்றும் திரு.K.தனராஜா ஆகியோரது ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திருமதி.A. சித்ரகலா, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண்.32/2025/ I1, நாள் : 18.10.2025 அம்மா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - ஊரக வளர்ச்சித்துறை - மதுரை மாவட்டம் திருமங்கலம் இரயில்வே பீடர் ரோட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், நேற்று 17.10.2025-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,11,000/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 17.10.2025-ம் தேதியன்று, மதுரை மாவட்டம் திருமங்கலம் இரயில்வே பீடர் ரோட்டில் உள்ள

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு.கா.மலர்வண்ணன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருமதி. பா.சந்திரகலா அவர்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.த.சூரியகலா அவர்கள் உயர் அதிகாரிகளிடம் தக்க அறிவுரை பெற்ற பின்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் மற்றும் ஊ.த.க. பிரிவு அலுவலர்கள் இணைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. அதன்படி ஆய்வாளர் திருமதி.த.சூரியகலா அவர்கள் ஆய்வுக்குழு ஆய்வாளராகிய எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து அதனை உறுதி செய்தேன். பின்னர் நேற்று 17.10.2025 மதியம் சுமார் 13.00 மணிக்கு மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு சென்றேன். நான் , ஆய்வாளர் திருமதி.த.சூரியகலா மற்றும் மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆளிநர்களுடன் சுமார் 13.10 மணிக்கு மதுரை ஊ.த.க. அலுவலகத்திலிருந்து புறப்பட்டு சுமார் 14.00 மணி முதல், மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் ரயில்வே பீடர் ரோட்டில் இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில் மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒப்பந்தாரர்களிடமிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு.மலர்வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி. சந்திரகலா மற்றும் மேற்படி அலுவலக ஊழியர்கள் லஞ்சமாக பணம் வசூல் செய்து வைத்துள்ளதாக தெரியவந்தது. அதன்பேரில் நேற்று மதியம் சுமார் 14.45 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள்ளே சென்று, மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அறையில் இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த அலுவலரிடம், நான் என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்த பின்னர், மேற்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்தேன். அப்போது, அந்த நபர் சற்று பதட்டத்துடன் தனது இருக்கையை விட்டு எழுந்து நின்று, தனது பெயர் மலர்வண்ணன் என்றும், தான் மேற்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கடந்த 03.07.2025-ம் தேதி முதல் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் இவ்வலுவலகத்தில், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) திருமதி. சந்திரகலா அவர்கள் 22.07.2024-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார்.

பின்பு மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். பின்னர் திரு.மலர்வண்ணன் அவர்களின் அறை முழுமையாக சோதனை செய்யப்பட்டது. பின்பு திரு.மலர்வண்ணன் அவர்களை சோதனை செய்தபோது அவர் அவரது சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து ரூ.1,060/- (ரூ.500 X 2, ரூ.20 X 3) பணத்தை தனது சொந்தப்பணம், செலவிற்கு வைத்திருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அவர் கூறிய காரணம் சரியாக இருந்ததால் அந்தப் பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்பு அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரே கிழக்கு திசையில் காணப்பட்ட மரமேஜையின் நடுவில் வைத்திருந்த IIM TRICHY என்று எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப் பையை சோதனை செய்ததில், அந்த பையில் காக்கி நிற பேப்பர் கவரில் பணம் கத்தையாக இருந்தது. அதனை நான் வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ரூ. 45,500/- (ரூ.500 X 91) இருந்தது. அப்பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது, அவர் அதற்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் நான், மேற்படி திரு.மலர்வண்ணன் அவர்கள் அப்பணத்தை வைத்திருந்த காக்கி நிற கவர் மற்றும் அவரது IIM TRICHY என்று எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப் பையும் கைப்பற்றினேன். பின்னர் அதற்கு அடுத்த கிழக்கு திசையில் உள்ள அறைக்குச் சென்று அங்கு அமர்ந்திருந்த மேற்படி திருமதி.சந்திரகலா அவர்களிடம் எங்கள் அனைவரையும் அறிமுகம் செய்து கொண்டு, திடீர் இணை சோதனை பற்றி அவரிடம் தகவல் தெரிவித்து, அவரிடம் உள்ள பணம் பற்றி கேட்டபோது, அவர் அவரது மணிபர்ஸிலிருந்து ரூ.750/- (ரூ.500 X 1, ரூ.100 X 2, ரூ.50 X 1) பணத்தை எடுத்து, அது தனது சொந்தப்பணம், அதை தனது செலவிற்காக வைத்திருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அவர் கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால் அந்தப் பணம் மீண்டும் நான் அவரிடமே ஒப்படைத்தேன். பின்னர் அவரது அறை முழுவதும் சோதனை செய்யப்பட்டது. அவரது அறையை விட்டு வடக்கு பக்கம் வாசல் வழியாக வெளியே வந்து, அதற்கு எதிரே கிழக்கு திசையில் தெற்கு பார்த்த வாசலுடன் ஒரு அறை காணப்பட்டது. அந்த அறையின் கதவுகள் மேற்கு பக்கத்திலும், கிழக்கு பக்கத்திலும் திறந்து இருந்தது. மேற்படி அறையில் கிழக்கு நோக்கி மேஜை மற்றும் இருக்கை போட்டு அவ்விருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மேற்படி திருமதி. நபிஷா பர்வின் அதனை அடுத்து இருந்த மேஜை மற்றும் இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த திருமதி. ராஜேஸ்வரி

ஆகியோர்களிடம் நான் மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை சோதனை பற்றி குறிப்பிட்டும், அனைவரையும் அறிமுகப்படுத்தியும், அவர்களிடம் பணம் உள்ளதா என கேட்டேன். அதற்கு திருமதி. நபிஷா பர்வின் அவர்கள் அவரது மணிபர்ஸில் வைத்திருந்த ரூ.1,000/- த்தை காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், அதனை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை ஏற்று கொண்டு நான் கைப்பற்றவில்லை. அவருக்கு முன்பிருந்த மேஜைக்கு கீழே இரண்டு ரூ.500/- நோட்டுகள் காணப்பட்டது. அதைப்பற்றி நான் மேற்படி நபிஷா பர்வினிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி நான் கைப்பற்றினேன். பின்பு அருகில் இருந்த மேற்படி திருமதி. ராஜேஸ்வரி அவர்களிடம் நான் பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என கேட்டபோது, அவர் தன்னிடம் பணம் ஏதுமில்லை எனக்கூறிவிட்டார். அவரது இருக்கைக்கு இடது புறத்திற்கு கீழே இரண்டு ரூ.500/- நோட்டுகள் காணப்பட்டது. அதைப்பற்றி நான் அவர்கள் மேற்படி ராஜேஸ்வரிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி நான் கைப்பற்றினேன். அந்த அறை முழுவதும் சோதனை செய்யப்பட்டது. அந்த அறையை அடுத்து கிழக்கு பக்கம் உள்ள அறைக்கு செல்லும் போது, மேற்படி அறைக்கு முன்பாக மேற்படி அறையின் பாதி கதவு மேற்கு பக்க சுவற்றை ஒட்டி உள்ளது. அதனை கிழக்கு பக்கமாக மூடி பார்த்த போது, அக்கதவை ஒட்டியுள்ள சுவற்றிற்கிடையில் காக்கி நிற கவர் ஒன்று காணப்பட்டது. அதனை நான் அவர்கள் எடுத்து சோதனை செய்ததில் அதில் ரூ.500/- நோட்டுகள் கத்தையாக இருந்தது. அதனை நான் எண்ணி பார்த்த போது அதில் ரூ.37,500/- (ரூ.500 X 75) காணப்பட்டது. அந்த இடத்திற்கு அருகில் இருந்த மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) -ன் திட்டப்பணிகள் அ 4, 5 மற்றும் 6 அறையின் அமர்ந்திருந்த கேட்டுத் தெரிந்த மேற்படி திருமதி.கவிதா, திருமதி. வாசுகி மற்றும் திருமதி. கார்த்திகா ஆகியோர்களிடம் அங்கு காணப்பட்ட பணம் ரூ.37,500/- பற்றி கேட்டபோது, அவர்கள் அதைப்பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார்கள். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக் கருதி நான் கைப்பற்றினேன். பின்னர் மேற்படி அறையில் கிழக்கு திசை நோக்கி மேஜை மற்றும் இருக்கை போட்டு, அவ்விருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.கவிதா அவர்களிடம் நான் அவர்கள் பணம் எதுவும் உள்ளதா என கேட்டேன். அதற்கு திருமதி. கவிதா அவர்கள் தனது பையில் வைத்திருந்த ரூ.1,050/-ஐ (ரூ.500 X 2, ரூ.50 X 1)

காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், அதனை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். நான் அதை ஏற்று கொண்டு அதனை கைப்பற்றப்படவில்லை. அவருக்கு முன்பிருந்த மேஜைக்கு கீழே இரண்டு ரூ.500/- நோட்டுகள் காணப்பட்டது. அதைப்பற்றி நான் மேற்படி கவிதாவிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி நான் கைப்பற்றினேன். பின்பு அவருக்கு அருகில் வடக்கு பக்கம் மேஜை மற்றும் இருக்கை போட்டு கிழக்கு பார்த்த அமர்ந்திந்த மேற்படி திருமதி. வாசுகி அவர்களிடம் நான் பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என கேட்டபோது, அதற்கு திருமதி. வாசுகி அவர்கள் தனது மணிபர்ஸில் வைத்திருந்த ரூ.700/- ஐ (ரூ.500 X 1, ரூ.100 X 2) காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், அதனை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். நான் அதை ஏற்று கொண்டு அதனை கைப்பற்றப்படவில்லை. அவருக்கு முன்பிருந்த மேஜைக்கு இடது புறத்தில் கீழே இரண்டு ரூ.500/- நோட்டுகள் காணப்பட்டது. அதைப்பற்றி நான் மேற்படி வாசுகியிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக் கருதி நான் கைப்பற்றினேன். மேலும் மேற்படி அறையில் கிழக்கு பக்க சுவற்றை ஒட்டி மேற்கு பார்த்து இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி. கார்த்திகா என்பவரிடம் நான், பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என கேட்டபோது, அதற்கு திருமதி. கார்த்திகா அவர்கள் அவரது இடது கையில் வைத்திருந்த ரூ.70/- ஐ (ரூ.50 X 1, ரூ.20 X 1) காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், அதனை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை ஏற்று கொண்டு நான் அதனை கைப்பற்றப்படவில்லை. அவர் அமர்ந்திருந்த இருக்கையின் வலது புறத்தில் நான் கு ரூ.500/- நோட்டுகள் காணப்பட்டது. அதைப்பற்றி நான் மேற்படி கார்த்திகாவிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் இளநிலை உதவியாளர் என்றும், தனது அ6 இருக்கை பொதுபிரிவு ஹாலில் உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி நான் கைப்பற்றினேன். மேற்படி அறைக்கு மேற்கு பக்கம் உள்ள கணினி அறைக்கு சென்று நான் அங்கு மேஜை இருக்கை போட்டு கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மேற்படி திருமதி. தாமரைச் செல்வி அவர்களிடம் மேற்படி திடீர் இணை சோதனை பற்றி தெரிவித்து, அனைவரையும் அறிமுகப்படுத்திக் கொண்டு அவரிடம் நான் பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என கேட்டபோது, அவர் அவரது மணிபர்ஸிலிருந்து வைத்திருந்த ரூ.4,700/- ஐ (ரூ.500 X 9, ரூ.200 X 1)

காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், தான் ATM -ல் அதனை எடுத்ததாக கூறி அதற்குரிய செல்போன் SMS-யை காண்பித்தார். அதை நான் ஏற்று கொண்டு அதனை கைப்பற்றப்படவில்லை. அவர் அமர்ந்திருந்த இருக்கையின் இடது புறத்தில் இரண்டு ரூ.500/- நோட்டுகள் காணப்பட்டது. அதைப்பற்றி நான் மேற்படி தாமரைச் செல்வியிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி நான் கைப்பற்றினேன். பிறகு மேற்படி நபர் அமர்ந்திருந்த மேற்படி அறை முழுவதும் சோதனை செய்யப்பட்டது. பின்பு அதற்கு அடுத்து கிழக்கு பக்கம் இருந்த ஊராட்சி ஒன்றிய பொது பிரிவு ஹாலில் தெற்கு சுவற்றை ஒட்டி மரமேஜை மற்றும் இருக்கை போட்டு வடக்கு நோக்கி பாத்து அமர்ந்திருந்த வட்டார மேனேஜர் ஹாலில் கேட்டுத் தெரிந்த மேனேஜர் திரு.M.R.சுரேஷ்பாபு அவர்களிடமும் அங்கிருந்த அலுவலர்களிடமும், நான் மேற்படி அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்வது சம்பந்தமாக உடன் இருந்த அனைவரையும் அறிமுகப்படுத்தி பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என கேட்டேன். அதற்கு அவர் அவரது சட்டையின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.730/-ஐ (ரூ.500 X 1, ரூ.200 X 1, ரூ.10 X 3) காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், தான் தனது செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை நான் ஏற்று கொண்டு அதனை கைப்பற்றப்படவில்லை. மேலும் அந்த ஹாலில் அவருக்கு அருகில் மேற்கு பக்கத்தில் அதேபோல் டேபிள் சேர் போட்டு அலுவலக உதவியாளர் திருமதி. பூர்ணாதேவி அவர்கள் அமர்ந்திருந்தார். அவரிடம் நான் பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என கேட்டேன். அதற்கு திருமதி. பூர்ணாதேவி அவர்கள் அவரது வலது கையில் வைத்திருந்த ரூ.1,500/-ஐ (ரூ.500 X 3) காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், அதனை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை ஏற்று கொண்டு நான் அவர்கள் அதனை கைப்பற்றப்படவில்லை. அவர் அமர்ந்திருந்த இருக்கையின் வலது புறத்தில் ரூ.500/- நோட்டுகள் கத்தையாக காணப்பட்டது. அதனை நான் எடுத்து எண்ணி பார்த்தபோது, அதில் ரூ.11,000/- காணப்பட்டது, அதைப்பற்றி நான் மேற்படி பூர்ணாதேவியிடம் கேட்டபோது அதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். எனவே அப்பணம் லஞ்சப்பணம் எனக்கருதி நான் கைப்பற்றினேன். மேற்படி திருமதி. பூர்ணாதேவிக்கு அருகில் வடக்கு பக்கத்தில் மேஜை சேர் போட்டு தெற்கு நோக்கி இருந்த மேற்படி அ6 உதவியாளர் திருமதி. கார்த்திகா-வின் மரமேஜை சோதனை செய்த போது, அதிலிருந்த டிராயரில் ரூ.500/- நோட்டுகள்

கத்தையாக இருந்தது. அதனை நான் எடுத்து எண்ணி பார்த்த போது அதில் ரூ.10,000/- (ரூ.500 X 20) காணப்பட்டது. இது சம்பந்தமாக மேற்படி கார்த்திகாவை வரவழைத்து விசாரித்த போது, அவர் அந்த மேஜையை பயன்படுத்துவது இல்லை என்றும், தான் தற்போது அதற்கு அடுத்துள்ள அ1 இருக்கை காலியாக உள்ளதால் அதை பயன்படுத்தி வருவதாகவும், அ1 இருக்கையின் உதவியாளர் செல்வி.தங்கவித்யா அவர்கள் பவானி சாகர் பயிற்சிக்கு சென்றிருப்பதாகவும், மேலும் அப்பணத்தைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தார். எனவே நான் அப்பணம் ரூ.10,000/-த்தை லஞ்சப்பணம் எனக்கருதி கைப்பற்றினேன். மேற்படி அலுவலகத்தில் இருந்து அனைத்து அறைகளும் சோதனையிடப்பட்ட பின்பு மேற்படி அலுவலகத்திற்கு முன்பு நின்றிருந்த அரசு வாகனம் போலிரோ TN 58 G 0232 (Bolero) அங்கிருந்த அதன் டிரைவர் திரு.முருகன் அவர்களிடம் நான் மேற்படி திடீர் இணை சோதனை பற்றி விபரம் தெரிவித்து, அவரை விசாரித்த போது தான் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.சந்திரகலா அவர்கள் பயன்படுத்தும் மேற்படி வாகனத்தின் டிரைவர் என்று கூறினார். பின்னர் அவரின் உதவியுடன் மேற்படி வாகனம் திறந்து சோதனையிடப்பட்டது. மேற்படி டிரைவர் அவர்களிடம் நான் பணம் ஏதுவும் வைத்துள்ளீர்களா எனக் கேட்டபோது, அவர் தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று கூறிவிட்டார். பின்னர் அதன் அருகில் நின்றிருந்த மற்றொரு போலிரே வாகனம் TN 58 G 0209-த்தின் டிரைவர் திரு. ஜீவானந்தம் அவர்களிடம் நான் விசாரித்த போது தான் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு. மலர்வண்ணன் அவர்கள் பயன்படுத்தும் மேற்படி வாகனத்தின் டிரைவர் என்று கூறினார். பின்னர் அவரின் உதவியுடன் மேற்படி வாகனம் திறந்து சோதனையிடப்பட்டது. மேற்படி டிரைவர் அவர்களிடம் நான் அவர்கள் பணம் ஏதுவும் வைத்துள்ளீர்களா எனக் கேட்டபோது, அவர் அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபார்ஸை எடுத்து அதிலிருந்த ரூ.4,000/- ஐ (ரூ.500 X 8) காண்பித்து அது தனது சொந்த பணம் என்றும், அதனை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை ஏற்று கொண்டு அதனை நான் கைப்பற்றப்படவில்லை. பின்னர் அவ்வாகனங்களுக்கு அருகில் நின்றிருந்த நபரை விசாரித்த போது, அவர் தனது பெயர் தனராஜா என்றும், தான் திருமங்கலம் சேர்மன் அவர்களின் அரசு வாகனமான ஸ்கார்பியோ வாகன எண். TN 58 G 0243 யின் அரசு ஓட்டுநர் என்றும், அந்த வாகனம் வெளியில் உள்ளதாகவும் தெரிவித்தார். பின்பு மேற்படி திரு.தனராஜா அவர்களிடம் நான் பணம் ஏதுவும் வைத்துள்ளீர்களா

எனக் கேட்டபோது, அவர் அவரது சட்டையின் இடது பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.750/- (ரூ.500X 1, ரூ.200 X 1, ரூ.50 X 1) எடுத்து காண்பித்து, அது தனது சொந்தபணம் என்றும், அது தனது தீபாவளி செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால் அப்பணத்தை நான் கைப்பற்றப்படவில்லை. சோதனையின் முடிவில் நான், மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு. மலர்வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருமதி. சந்திரகலா, திருமதி.A.தாமரைச்செல்வி, திருமதி.V.G. ராஜேஸ்வரி, திருமதி.S. வாசுகி, திருமதி.A. நபிஷா பர்வின், திருமதி.S.கார்த்திகா, திருமதி. R.கவிதா, திருமதி. A.பூர்ணாதேவி, திரு.S.முருகன், திரு.R.ஜீவானந்தம் மற்றும் திரு.K.தனராஜா ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீர் இணை ஆய்வின் போது மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் முறையாக விபரம் தெரிவிக்க இயலாமல் வைத்திருந்த பணம் மொத்தம் **ரூ.1,11,000/-** (ரூ.500 X 222), பணம் வைத்திருந்த காக்கி நிற கவர்கள்-2 மற்றும் மேற்படி திரு.மலர்வண்ணன் அவர்களின் IIM TRICHY என்று எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப் ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்பு நான் மேல் விசாரணைக்காக வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு. மலர்வண்ணன் அவர்கள் ஆஜர் செய்த **(1)** திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வருகைப் பதிவேடு களபணியாளர்களின் வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 21 எழுதப்பட்டது), **(2)** திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக முகாம் பதிவேடு-2025 (வட்டார ஊராட்சி பிரிவு) (பக்கம் 1 முதல் 194 எழுதப்பட்டது) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி. சந்திரகலா அவர்கள் ஆஜர் செய்த **(3)** திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வருகைப் பதிவேடு களபணியாளர்களின் வருகை பதிவேடு 2025 (பக்கம் 1 முதல் 21 எழுதப்பட்டது), **(4)** திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக முகாம் பதிவேடு-2025 (கிராம ஊராட்சி பிரிவு) (பக்கம் 1 முதல் 195 எழுதப்பட்டது) ஆகிய ஆவணங்கள் கைப்பற்றினேன். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு. மலர்வண்ணன் அவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி. சந்திரகலா அவர்கள் ஆகியோரை நான் விசாரித்த போது, மேற்படி அலுவலகத்தில் தனிநபர் பணயிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், எங்களது அலுவலகத்தில் கொடிநாள் பணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை. அதற்கான ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் ஏதுவும் கிடையாது என்றும் தெரிவித்தார்கள்.

அந்த திடீர் ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. சோதனையின் போது மதுரை ஊ.த.க.பிரிவு காவல் ஆளிநர் உதவியுடன் மேற்படி சோதனை கைபேசி மூலம் வீடியோ பதிவு செய்யப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வுக்கு ஒரு குறிப்புரை 17.10.2025-ஆம் தேதியன்று மதியம் 14.45 மணி முதல் இரவு 23.00 மணி வரை தயார் செய்யப்பட்டது. மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு. மலர்வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருமதி. சந்திரகலா, திருமதி.A.தாமரைச்செல்வி, திருமதி.V.G. ராஜேஸ்வரி, திருமதி.S. வாசுகி, திருமதி.A. நபிஷா பர்வின், திருமதி.S.கார்த்திகா, திருமதி. R.கவிதா, திருமதி. A.பூர்ணாதேவி, திரு.S.முருகன், திரு.R.ஜீவானந்தம் மற்றும் திரு.K.தனராஜா ஆகியோரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் மேற்படி **ரூ.1,11,000/-** (ரூ.500 X 222), பணம் வைத்திருந்த காக்கி நிற கவர்கள்-2 மற்றும் மேற்படி திரு.மலர்வண்ணன் அவர்களின் IIM TRICHY என்று எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப் மற்றும் கைப்பற்றப்பட்ட மேற்படி 4 பதிவேடுகள் ஆகியவை இணைத்து, திடீர் இணை ஆய்வின் போது திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்த, 1) திரு.கா.மலர்வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) 2) திருமதி.பி.சந்திரகலா, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), 3)திருமதி.A.தாமரைச்செல்வி, ஊராட்சி செயலாளர், தி.புதுப்பட்டி ஊராட்சி, 4)திருமதி.V.G.ராஜேஸ்வரி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), 5)திருமதி.S.வாசுகி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை), 6)திருமதி.A.நபிஷா பர்வின், தற்காலிக கணினி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), 7) திருமதி.S.கார்த்திகா, இளநிலை உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), 8) திருமதி. R.கவிதா, இளநிலை உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் 9) திருமதி. A.பூர்ணாதேவி, அலுவலக உதவியாளர் ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- XXXXX 18/10/25 (A. சித்ரகலா,) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை. இணைப்புகள் : 1) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,11,000/-. 3)

கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் வைத்திருந்த காக்கி நிற கவர்கள்-2, 4) கைப்பற்றப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு.மலர்வண்ணன் அவர்களின் IIM TRICHY என்று எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப். 5) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட 4 ஆவணங்கள், 6) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), திரு. மலர்வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருமதி. சந்திரகலா, திருமதி.A.தாமரைச்செல்வி, திருமதி.V.G. ராஜேஸ்வரி, திருமதி.S. வாசுகி, திருமதி.A. நபிஷா பர்வின், திருமதி.S.கார்த்திகா, திருமதி. R.கவிதா, திருமதி. A.பூர்ணாதேவி, திரு.S.முருகன், திரு.R.ஜீவானந்தம் மற்றும் திரு.K.தனராஜா ஆகியோரது வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (18.10.2025) at 11.00 hrs along with Joint Surprise Check Proceedings dated 17.10.2025, 12 Statements and seized Cash Rs.1,11,000/-, Kakhi Covers-2, Laptop Bag-1 and 4 documents. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.17/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS 2023 on 18.10.2025 at 12.00 hrs. Sd/- XXXXX 18.10.25 (T. Suriyakala), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report of Tmt. A. Chitrakala, Joint Surprise Check Proceedings Dated: 17.10.2025 and 12 statements are submitted to the Hon'ble Principal District and Sessions Court, Madurai and other copies were sent to the officers concerned.

T. Suriyakala,
Inspector of Police,
V&AC, Madurai
18.10.25